# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 46 | 4 Pages | 16.09.2023 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 46 | 4 பக்கங்கள் | 16.09.2023 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## மகளிர் உரிமைத் தொகை: காஞ்சிபுரத்தில் முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

காஞ்சிபுரம், செப். 16

மகளிர் உரிமைத் திட்டத்தில் சேர ஒரு கோடியே 63 லட்சம் பெண்கள் விண்ணப்பித்தனர். தகுதி வாய்ந்த குடும்பத்தலைவிகளின் வங்கிக்க ணக்குகளுக்கு ஏற்கனவே ரூ.1 அனுப்பி சோதனை செய்யப் பட்டது.

கடந்த 2021ம் ஆண்டு நடை பெற்ற சட்டமன்ற தேர்தலுக்கு முன் பாக வெளியிடப்பட்ட தி.மு.க. தேர் தல்அறிக்கையின்கடைசிபக்கத்தில், 'தமிழ்நாட்டில் உள்ள குடும்பத்தலைவிகள் அனைவருக் கும் மாதந்தோறும் ரூ.1,000 உரி மைத்தொகை வழங்குவோம்' என்று அறிவிக்கப்பட்டது. அந்த தேர்த லில் தி.மு.க. வெற்றி பெற்று தமிழ கத்தில் ஆட்சி அமைத்த நிலையில், பல்வேறு அறிவிப்புகள் நடைமு றைக்கு வந்தாலும், குடும்பத் தலை விகளுக்கு ரூ.1,000 உதவித்தொகை வழங்கும் திட்டம் அந்த பட்டியலில் இடம்பெறாமலேயே இருந்து வந் தது. இந்த நிலையில், தமிழக சட்ட சபையில் தாக்கல் செய்யப்பட்ட 20232024ம் ஆண்டுக்கான பட் ஜெட்டில், குடும்ப தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 உரிமைத் தொகை வழங்கும் திட்டத்துக்கு ரூ.7 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட் டது. இந்த திட்டம் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ந் தேதி (இன்று) தொடங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. இந்த திட்டத்துக்காக பெண்கள் விண்ணப் பிக்கும் முகாமை கடந்த ஜூலை மாதம் 24ந்தேதி தர்மபுரி மாவட்டம் தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளி யில் நடைபெற்ற விழாவில் முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இதற்காக தமிழகம் முழு வதும் 35 ஆயிரத்து 925 முகாம்கள் நடத்தப்பட்டன. இந்தப் பணியில், 68 ஆயிரத்து 190 தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். கலைஞர் மக ளிர் உரிமைத் திட்டத்துக்காக விரி வான வழிகாட்டு நெறிமுறைகளை யும் அரசு வெளியிட்டது. இந்த திட்டத்தில் சேர ஒரு கோடியே 63




லட்சம் பெண்கள் விண்ணப்பித்தனர்.

இதில், தகுதி இல்லாத சுமார் 56 லட்சத்து 50 ஆயிரம் மனுக்கள் நிரா கரிக்கப்பட்டன. இறுதியாக, தகுதி வாய்ந்த ஒரு கோடியே 6 லட்சத்து 55 ஆயிரம் மனுக்கள் ஏற்றுக்கொள் ளப்பட்டன. பேறறிஞர் அண்ணா வின் 115வது பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுவதையொட்டி காஞ்சிபுரத்தில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார். இதைத்தொடர்ந்து அண்ணா பிறந்த காஞ்சிபுரத்தில் உள்ள பச்சையப்பன் ஆண்கள் கல் லூரி மைதானத்தில் குடும்பத்தலைவிகள் ஆவலுடன் எதிர்பார்த்த ரூ.1,000 உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தை இன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முறைப்படி தொடங்கி வைத்தார். இதைத்தொ டர்ந்து பிற மாவட்டங்களில் அந் தந்த மாவட்ட அமைச்சர்கள் தொடங்கி வைத்தார்கள். தகுதி வாய்ந்த குடும்பத்தலைவிகளின் வங்கிக்கணக்குகளுக்கு ஏற்கனவே ரூ.1 அனுப்பி சோதனை செய்யப் பட்டது.

இந்த நிலையில், பலரது வங்கிக்க ணக்குகளில் ரூ.1,000 வரவு வைக் கப்பட்டது. இது அந்த பெண்க ளுக்குஇன்பஅதிர்ச்சியாகஇருந்தது. மேலும், நிராகரிக்கப்பட்ட மனுதா ரர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்பட்டு உள்ளது. ஆவண சரிபார்ப்பில் தகுதியான பய னாளியாக இருந்தால், அவர்களும் ரூ.1,000 மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத்திட் டத்தை தொடங்கி வைத்து முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதா வது: என்னுடைய அரசியல் பயணத்துக்கு எத்தனையோ உந்து சக்திகள் இருக்கலாம் எல்லாவற்றுக் கும் சிகரம் வைத்த மாதிரி இருந்தது. இந்த காஞ்சி மாநகர் ரொம்ப சின்ன வயதில், கோபாலபுரம் வீதியிலே, இளைஞர்தி.மு.க.என்றஅமைப்பை ஏற்படுத்தி அந்த அமைப்பின் மூல மாக பொது வாழ்வில் என்னை ஈடு படுத்திக் கொண்டேன். அப்போது பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துவது என்னுடைய வழக்கம். 1971ம் ஆண்டு அண்ணாவின் கல்லறை யிலே மலர் வளையம் வைத்து மரி யாதை செலுத்தி அண்ணா சதுக்கத் தில் இருந்து அண்ணா சுடரை கையில் ஏந்தி தொடர் ஓட்டமாக நானும் நண்பர்களும் புறப்பட்டு காஞ்சீபுரம் வந்து கழக மாநாட்டு மேடையில் தலைவர் கலைஞர் கையில் அண்ணா சுடரை நான் ஒப் படைத்தேன். இன்றைக்கு தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணா வும் தலைவர் கலைஞரும் எடுத்து வந்த சுயமரியாதை, சமத்துவம், சமூ கநீதி, மாநில சுயாட்சி உள்ளிட்ட தமிழ் சமுதாயத்தை காக்க கூடிய திராவிட சுடரை ஏந்தி வந்துள்ளேன். அவரது கொள்கைகளை ஏற்று வாழ் வதால்தான் தமிழ் சமூகத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த போகிறேன். கலைஞர் மகளிர் உரி மைத்திட்டத்தை தொடங்கி வைக்க இங்கு வந்துள்ளேன். இந்த திட் டத்தை நான் தொடங்கி வைப்பது என் வாழ்நாளில் எனக்கு கிடைத்த மிகப்பெரிய பேராக நான் கருதுகி றேன். தாய் தமிழ்நாட்டுக்கு 'தமிழ் நாடு' எனறு பெயர் சூட்டிய பேரறி ஞர் அண்ணா இனி இந்த பெயரை யாராலும் நீக்க முடியாது. இந்த பெயர் நீடிக்கும் காலமெல்லாம் இந்த நாட்டை அண்ணா துரை தான் ஆள்கிறான் என்றார். அதே போல் இன்றைக்கு மகளிர் உரிமைத் திட் டத்தை தொடங்கும் இந்த முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் சொல் கிறேன். இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு பெண்கள் உரிமைத் தொகை பெறுகிறார்களோ, அத் தனை ஆண்டுகளுக்கும் இந்த ஸ்டாலின் தான் ஆள்கிறான் என்று பொருள். இந்த 2½ ஆண்டில், எத் தனை திட்டங்கள், மகளிருக்கு கட் டணமில்லா பேருந்து வசதி பெற விடியல் பயணத்திட்டம், பசியோடு பள்ளிக்கு வரும் குழந்தைகளுக்கு காலை உணவுத்திட்டம், உயர்கல்வி கற்க வரும் மாணவிகளுக்கு 1000 ரூபாய் வழங்குகிற புதுமைப் பெண் திட்டம், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் நான் முதல் வன் திட்டம், இந்த திட்டங்களை தொடங்கிய நாட்களில் எப்படிப் பட்ட மகிழ்ச்சியை நான் அடைந் தேனோ, அதைவிட அதிகமான மகிழ்ச்சியில் இப்போது இருக்கி றேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

## 400 ரூபாய்க்காக 2 பிரிவினர் மோதல்: பீகாரில் துப்பாக்கி சூட்டில் 3 பேர் பலி



டெல்லி, செப். 16

பீகார் மாநிலம் பதுஹா காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட சுரகா கிராமத்தில் பால் நிலுவை தொகை ரூ.400 வழங்குவது தொடர்பானதகராறில்2பிரிவினர் இடையே திடீர் மோதல் ஏற்பட்டது. 2 பிரிவினரும் கைகளாலும், ஆயுதங்களாலும் தாக்கிகொண்டனர். அப்போது இரு தரப்பினருமே துப்பாக்கியால் சுட்டுக்கொண்டனர். இதில் 50 ரவுண்டுகள் துப்பாக்கி சூடு நடந்தது. இந்த துப்பாக்கி சூட்டில் ஒரு தரப்பை சேர்ந்த ஜெய்சிங்(வயது50), சைலேஷ் குமார்(35) ஆகிய 2 பேர், மற்றொரு தரப்பில் பிரதீப்குமார்(35) என 3 பேர் கொல்லப்பட்டனர். இதனால் அங்கு பதட்டமும், பரபரப்பும் ஏற்பட்டது. சம்பவ இடத்தில் ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டனர். இரு தரப்பினரையும் சேர்ந்த 11 பேரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். துப்பாக்கி சூட்டில் காயமடைந்த மின்டு குமார் (22) என்பவர் நாளந்தா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவரது நிலை கவலைக்கிடமாக உள்ளது. வெறும் 400 ரூபாய்க்காக 3 உயிர்கள் பலியானது பீகாரில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## நொய்டாவில் கட்டிட பணியின் போது லிப்ட் அறுந்து விழுந்து 4 தொழிலாளர்கள் பலி



உத்திரபிரதேசம், செப். 16

உத்தரபிரதேச மாநிலம் நொய்டா பிஸ்ராக் கோட்வாலி பகுதியில்உள்ளஒருகுடியிருப்பு வளாகத்தில் புதிதாக கட்டிடம் கட்டும் பணி நடந்து வருகிறது. இன்று காலை இப்பணியில் ஈடுபட்ட தொழிலாளர்கள் கட்டுமான பொருட்களை லிப்டில் எடுத்து சென்றனர். அப்போது லிப்ட் திடீரென அறுந்து விழுந்தது. இதில் லிப்டில் சென்ற 4 தொழிலாளர்கள் பரிதாபமாக இறந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர். இது பற்றி அறிந்ததும் தீயணைப்பு படையினர் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். படுகாயத்துடன் உயிருக்கு போராடிக்கொண்டிருந்த தொழிலாளர்களை மீட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். சம்பவம் நடந்த போது லிப்டில் 12 பேர் இருந்தனர். அதிக பாரம் தாங்காமல் இந்த விபத்துநடந்ததாககூறப்படுகிறது. மதிக்கமுடிவுசெய்துள்ளனர். பக்தர்கள் வந்துசெல்லும்வகையில்தடுப்புகள்அமைக்கப்படஉள்ளது. மாடவீதிக்கு வெளியே காத்திருக்கும் பக்தர்களை வரிசையில் அனுமதித்து கருட சேவையில் சாமி தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட உள்ளனர்.

## கேரளாவில் மேலும் ஒருவருக்கு நிபா வைரஸ் பாதிப்பு



திருவனந்தபுரம், செப். 16

கேரள மாநிலத்தில் தற்போது மீண்டும் நிபா வைரஸ் பரவி வருகிறது. கோழிக்கோடு மாவட்டத்தை சேர்ந்த இருவர் காய்ச்சல் பாதித்து தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், அடுத்தடுத்து இறந்தனர். தொற்று பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் கோழிக்கோடு மாவட்டத்தில் கடும் கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டு உள்ளன. தொற்று பரவலை கட்டுப்படுத்துவம் விதமாக கோழிக்கோடு மாவட்டத்தில் பள்ளிகள், கல்லூரிகள் உள்ளிட்ட கல்வி நிலையங்களுக்கு நேற்றும், இன்றும் விடுமுறை விடப்பட்டிருந்தது. நிபா வைரஸ் பாதிப்பு மற்றும் அங்கு மேற்கொள்ளப்படும் பேரிடர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஆய்வு செய்வதற்காக மத்திய குழுவினர் கேரளா வந்தனர்.

மத்திய சுகாதாரக்குழுவின் மூத்த ஆலோசகரும், நுண்ணுயிரியல் நிபுணருமான மால சாப்ரா தலைமையிலான 6 பேர் குழு சுகாதாரத்துறை மந்திரி வீணா ஜார்ஜ், கோழிக்கோடு மாலட்ட கலெக்டர் கீதா மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியது. அவர்களிடம் கோழிக்கோடு மாவட்டத்தில் செய்யப்பட்டுள்ள நோய் தடுப்பு நடவடிக்கைகள்உள்ளிட்டவைகள்குறித்துகேட்டறிந்தமத்தியகுழுவினர், தொற்று பாதித்த பகுதிகளுக்கு சென்று ஆய்வு செய்தனர். தொற்று பாதிப்புக்கு உள்ளான மருதோன்கரை உள்ளிட்ட இடங்களில் மத்திய குழுவினர் தொடர்ந்து ஆய்வில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் நிபா வைரஸ் தொற்று கண்டறிவதை தீவிரப்படுத்தும் விதமாக புனேவில் உள்ள தேசிய வைராலஜி நிறுவனத்தில் இருந்து 2 நடமாடும் ஆய்வக வாகனங்கள் கோழிக்கோட்டுக்கு வந்துள்ளன. அதில் நிபா வைரஸ் தொற்று அறிகுறிகள் உள்ளவர்களுக்கு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் கோழிக்கோடு மாவட்டத்தில் இருந்து பிற மாநிலங்களுக்குநிபாவைரஸ்தொற்றுபரவாமல்தடுக்கும்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி கேரளாவின் வடக்கு மாவட்டங்களான மலப்புரம், வயநாடு, திருச்சூர் மற்றும் பாலக்காடு மாவட்டங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன. அந்த மாவட்டங்களில் பொது இடங்களுக்கு செல்பவர்கள் முகக்கவசம் அணியுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறது. பள்ளி மாணவர்கள் முகக்கவசம் அணியுமாறு அறிவுறுத்தப்பட்டு உள்ளது. மருத்துவமனைகளுக்கு வரும் பார்வையாளர்களை கட்டுப்படுத்த உத்தரவிடப்பட்டிருக்கிறது. மேலும் மாவட்டத்தின் எல்லைப்பகுதிகளில் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்பை தீவிரப்படுத்துமாறு சுகாதாரத்துறையினருக்கு மாவட்ட கலெக்டர்கள் உத்தரவிட்டுள்ளனர். இந்நிலையில் மேலும் ஒருவருக்கு நிபா வைரஸ் தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. 39 வயது மதிக்கத்தக்க அந்த நபர் தனியார் ஆஸ்பத்திரியில் நிபா வைரஸ் அறிகுறியுடன் சிகிச்சை பெற்று வந்தார். அவரிடமிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரி, புனேவில் இருந்து வரவழைக்கப்பட்டிருந்த நடமாடும் ஆய்வக வாகனத்தில் நடத்தப்பட்ட பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது அவருடன் தொடர்பில் இருந்து வந்த நபர்களின் பட்டியலை சுகாதாரத்துறையினர் சேகரித்து வருகின்றனர்.

மேலும் ஒரு நபருக்கு தொற்று பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதால் கேரள மாநிலத்தில் நிபா வைரஸ் பாதித்தோரின் எண்ணிக்கை 6 ஆக அதிகரித்துள்ளது.

## பணிக்கம்பட்டியில் கூட்டுறவு சங்கம் அமைக்க கோரி முதல்வருக்கு மனு

பல்லடம், செப். 16

பணிக்கம்பட்டி ஊராட்சியில் சுமார் 6 ஆயிரத்திற்கும் மேற்பட் டோர் வசித்து வருகின்றனர். வங்கி சம்பந்தமான பணிகளுக்கும் விவசா யிகள் பல்லடம் சென்று வர வேண் டிய நிலை உள்ளது.

பல்லடம் ஒன்றியம் பணிக்கம் பட்டியில் கூட்டுறவு சங்கம் அமைக்க வேண்டும் என கிராம மக் கள், முதல்வர் தனிப்பிரிவுக்கு கோரிக்கை மனு அனுப்பி உள்ளனர். அந்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது: பல்லடம் ஒன்றியம் பணிக்கம்பட்டி ஊராட்சி யில் சுமார் 6 ஆயிரத்திற்கும் மேற் பட்டோர் வசித்து வருகின்றனர். இந்த நிலையில் இங்கு விவசாயம், விசைத்தறிகூடம் , கறிக்கோழி பண்ணை உள்ளிட்ட தொழில்கள் நடைபெற்று வருகின்றன.இந்தநி லையில்பணிக்கம்பட்டிகிராமத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் இல்லை. இதனால் விவசாயி களுக்கான உரங்கள், மருந்து பொருட்கள் உள்ளிட்டவை வெளி மார்க்கெட்டில் வாங்க வேண்டிய நிலை உள்ளது. மேலும் வங்கி சம் பந்தமான பணிகளுக்கும் விவசாயிகள் பல்லடம் சென்று வர வேண்டிய நிலை உள்ளது. இதற்கி டையே மத்திய அரசு பட்ஜெட்டில் கிராமங்கள் தோறும் கூட்டுறவு சங் கம் அமைக்க நடவடிக்கை எடுக்கப் படும் என அறிவித்துள்ளது. எனவே பணிக்கம்பட்டி கிராமத்துக்கு முன் னுரிமை அளித்து கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பல்லடம் அருகே சிறப்பு மருத்துவ முகாம்

பல்லடம், செப். 16

கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட இலவச சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. மருத்துவ முகாமில் 150 க்கும் மேற்பட்ட கர்ப் பிணி பெண்களுக்கு சத்துணவு பெட்டகம் வழங்கப்பட்டது.

பல்லடம் அருகே உள்ள கரைப்பு தூர் ஊராட்சி உப்பிலிபாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில், கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட இலவச சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. உப்பிலிபா ளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலை யம், செம்மிபாளையம் வட்டார சுகாதார நிலையம் ஆகியவை இணைந்து இந்த சிறப்பு முகாமை நடத்தினர்.

இந்த முகாமிற்கு பல்லடம் ஊராட்சி ஒன்றிய குழு துணைத்



தலைவர் பாலசுப்பிரமணியம் தலைமை வகித்தார். மாவட்ட கவுன் சிலர் கரைப்புதூர் ராஜேந்திரன், ஒன் றிய கவுன்சிலர் ஆர்.ஆர். ரவி, ஆகி யோர் முன்னிலை வகித்தனர். பல்லடம் வட்டார மருத்துவ அலுவ லர் சுடர்விழி அனைவரையும் வர வேற்றார். இந்த மருத்துவ முகாமில் 150 க்கும் மேற்பட்ட கர்ப்பிணி பெண்களுக்கு சத்துணவு பெட்டகம் வழங்கப்பட்டது. மேலும் ஆயிரத் திற்கும் மேற்பட்டோர் இந்த சிறப்பு மருத்துவமுகாமில்கலந்துகொண்டு மருத்துவ பரிசோதனை செய்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் கணபதிபாளையம் ஊராட்சி மன்ற தலைவர் நாகேஸ்வரி சோமசுந்தரம், ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் கள் கரைப்புதூர் கார்த்திகா மகேஸ் வரன் கணபதி பாளையம் முத்துக்குமார் மற்றும் ஊராட்சி மன்ற வார்டு மெம்பர்கள், சுகாதாரத் துறையினர், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# அ.தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வரும்: எடப்பாடி பழனிசாமி உறுதி



சென்னை, செப். 16

தாம்பரத்தில் அ.தி.மு.க. பொதுக்கூட்டம் இன்று நடைபெற்றது. அதில் பேசிய எடப்பாடி பழனிசாமி, அ.தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வரும் என்றார். மேலும் படிக்க சென்னை: சென்னை தாம் பரத்தில் இன்று அ. தி.மு.க. பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப் பாடி பழனிசாமி பேசியதா வது: எத்தனை வழக்குகள் தொடர்ந்தாலும் அ.தி. மு.க. மீண்டும் ஆட்சிக்கு வரும். தி.மு.க. ஆட்சி யில் போதைப்பொருள் நடமாட்டம், கள்ளச்சா ராய விற்பனை அதிகரித் துள்ளது. அ.தி.மு.க. ஆட் சியில் அனைத்து ரேஷன் கார்டுகளுக்கும் ரூ.1000 வழங்கப்பட்டது. தி.மு.க. அரசு இரண்டரை ஆண்டு களில் ரூ.2.73 லட்சம் கோடி கடன் வாங்கியுள் ளது. ஒரே நாடு ஒரே தேர் தல் கண்டிப்பாக வரும். அ.தி.மு.க. தொண்டர்கள் தயாராக வேண்டும். ஒரே நாடு ஒரு தேர்தல் அறிமு கப்படுத்தப்பட்டால் தான் தமிழ்நாட்டை காப்பாற்ற முடியும். மின்சாரத்தை தொட்டால் தான் ஷாக் அடிக்கும்; இப்போது மின் கட்டணத்தை கேட் டாலே ஷாக் அடிக்கிறது என தெரிவித்தார்.

# இ.எஸ். தொழில் நுட்ப கல்லூரியில் இலவச வேலைவாய்ப்பு பயிற்சி

விழுப்புரம், செப். 16

விழுப்புரம்வழுத ரெட்டி யில் உள்ள இ.எஸ். தொழில் நுட்ப கல்லூரியில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத் தால் அங்கிகரிக்கப் பட்ட வேலை வாய்ப்புடன் கூடிய 3 மாத கால இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த பயிற்சியில் சேர்ந்து படிக்கும் அனைவரும் வேலை வாய்ப்புபெறலாம் என்று கல்லூரியின் தாளா ளர் செந் தில்குமார் தெரி வித்தார். முழுமையாக பயிற்சி முடித்த மாணவர்க ளுக்கு தமிழக அரசின் சான்றிதழ்வழங்கப் பட்டு வேலை வாய்ப்பு பெற்றுத்தர படும்.

இருச்சக்கர வாகனம் பழுது பார்த்தல், உதவி எலெக்ட் ரீசியன் பணிக ளுக்கு பயிற்சி அளிக்கப்படு கிறது.10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் படித்த 18 வயதுக்கு மேல் 45 வயதுக்குள் உள்ளவர்கள் இந்த இலவச வேலை வாய்ப்பு பயிற்சிக்கு விண்ணப்பிக்க லாம் என தெரிவிக் கப்பட்டு உள்ளது.

# பட்டு புழுக்கள் கூடு கட்டாமல் திடீரென இறப்பதால் உடுமலை விவசாயிகள் அதிர்ச்சி

உடுமலை, செப். 16

1.65 லட்சம் புழுக்கள் திடீரென இறந்ததால் ரூ.1.75 லட்சம் நஷ்டம் ஏற்பட்டது. புழு வளர்ப்பு மனைக்கு 10 லட்சம் ரூபாய் வரைமுதலீடு செய் யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 44 ஆயி ரத்து 417 ஏக்கர் பரப்பள வில் மல்பெரி சாகுபடி செய்யப்பட்டு 25,259 புழு வளர்ப்பு மனைகளில் நாள் தோறும் 10 ஆயிரம் டன் பட்டுக்கூடு உற்பத்தி செய்யப்படுகிறது. பட்டு வளர்ச்சித்துறை சார்பில், கோவை, ஈரோடு, தாள வாடி ஆகிய வித்தகங்களில் முட்டை உற்பத்தி செய்யப்பட்டு இளம்புழு வளர்ப்பு மனை களுக்கு வழங்கப்படுகி றது. இங்கு 7 நாட்கள் புழு வளர்க்கப்பட்டு, விநி யோகம் செய்யப்படுகி றது. பட்டு புழு வளர்ப்பு மனைகளில் 22 நாட்கள் பராமரிக்கப்பட்டு பட்டுக் கூடு உற்பத்தி செய்யப்படு கிறது. இத்துறையில் அரசு சார்பில் உற்பத்தி செய்து வழங்கப்படும் முட்டை கள் தரமற்றதாக உள்ள தால் கூடு கட்டும் பருவத் தில் கூடு கட்டாமல் புழுக்கள்திடீரெனஇறந்து வருவதால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ள னர். கடந்த வாரம் உடு மலை கண்ணமநாயக்க னூர் விவசாயி யோகேஸ்வரனுக்கு சொந் தமான புழு வளர்ப்பு மனையில், ஒரு முட்டை தொகுதிக்கு 550 புழுக்கள் வீதம் 300 முட்டை தொகு தியில் 1.65 லட்சம் புழுக் கள் திடீரென இறந்ததால் ரூ.1.75 லட்சம் நஷ்டம் ஏற்பட்டது. மேலும் இரு புழு வளர்ப்பு மனைக ளில், புழுக்கள் திடீரென இறந்தன. ஆண்டியகவுண் டனூர் பெரிசனம்பட் டியை சேர்ந்த, விவசாயி லோகநாதன் புழு வளர்ப்பு மனையில் கூடு கட்டும் பருவத்தில் இருந்த புழுக் கள் இறந்தன. இங்கு 150 முட்டை தொகுதிகளில் 82 ஆயிரம் புழுக்கள் வரை இறந்துள்ளன. எலையமுத்தூர் செல்வராஜ் புழு வளர்ப்பு மனையில், 100 முட்டை தொகுதிகள் வைக்கப்பட்டிருந்த நிலை யில் 55 ஆயிரம் புழுக்கள் வரை இறந்தன. இதனால் 3 லட்சம் ரூபாய் வரை விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து தமிழக பட் டுக்கூடு உற்பத்தி விவசா யிகள் நல சங்கத்தலைவர் செல்வராஜ் கூறியதாவது: தரமற்ற பட்டு புழு முட்டை வினியோகம், இளம்புழு வளர்ப்பு மனை கண்காணிப்பில் அதிகாரி கள் அலட்சியம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களி னால் பட்டுக்கூடு உற்பத்தி தொழில் வீழ்ச்சியடைந்து வருகிறது. ஏறத்தாழ 50 சத வீதம் விவசாயிகள் தற் போது இத்தொழிலை விட்டுச்செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

தரமற்ற முட்டை உற் பத்தி செய்து வினியோகம் செய்வதால் புழுக்கள் கூடு கட்டாமல் திடீரென இறந்து வருகின்றன. புழு வளர்ப்பு மனைக்கு 10 லட் சம் ரூபாய் வரை முதலீடு செய்து புழு வளர்ப்பின் போது திடீரென இறப்ப தால் ஒவ்வொரு மனைக ளிலும் ரூ. 1.50 லட்சம் முதல் 3 லட்சம் ரூபாய் வரை ஒரு பேட்ச் வளர்க் கும் போதும் நஷ்டம் ஏற்ப டுகிறது.

நூற்றுக்கணக்கான விவ சாயிகள் கடந்த சில மாதங் களில் பாதித்துள்ளனர். தர மான முட்டை வினியோகிக்கவும், இளம் புழு வளர்ப்பு மனைகளை கண்காணித்து விவசாயிகளுக்கு தரமான புழு வினியோகம் செய் வதை உறுதி செய்ய வேண் டும். பாதிக்கப்பட்ட விவ சாயிகளுக்கு உரிய நஷ்ட ஈடு வழங்கவும், பட்டு வளர்ச்சித்துறை சார்பில் இன்சூரன்ஸ் பிரீமியம் செலுத்தப்பட்டு வந்த நிலையில் நடப்பாண்டு விவசாயிகளிடமிருந்து ரூ.290 வசூலிக்கப்பட் டது.

5 மாதமாகியும் இத்தொ கையும் உரிய இன்சூரன்ஸ் நிறுவனத்திடம் செலுத்தி காப்பீடு செய்யவில்லை. அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரி வித்தார்.

# அரசு வேலை வாங்கித் தருவதாக கூறி ரூ.36.20 லட்சம் மோசடி

அரியலூர், செப். 16

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் அருகே அரசு வேலைவாங் கித் தருவதாகக் கூறி ரூ.36.20 லட்சம் பணம் மோசடி செய்து, போலி ஆணை வழங்கிய தம்பதி வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர். கடலூர் மாவட்டம், காட்டுமன் னார்கோயில் அருகே யுள்ள கண்டமங்கலம், குமிளங்காட்டு தெருவைச் சேர்ந்தவர்பிரபாகரன்(43). இவரது வீட்டுக்குச் சென்ற உறவினரான அரியலூர் மாவட்டம் உடையார்பா ளையம் அடுத்த விழபள் ளம் கிராமத்தைச் சேர்ந்த பிரகாஷ்(42), இவரது மனைவி மதியழகி(35) ஆகியோர் பணம் கொடுத் தால் தங்களுக்கு பிஎஸ் என்எல் நிறுவனத்தில் வாங்கித் தருவதாக கூறி அவரிடம் வங்கி பரிவர்த் தனை மூலமாக ரூ.4,90,000}மும், ரொக்க மாக ரூ.4 லட்சமும் பெற் றுக் கொண்டனர்.

மேலும், ஊரில் யாரா வதுபடித்துவிட்டுவேலை இல்லாமல் இருந்தால் அழைத்து வாருங்கள் அவர்களுக்கும் வேலை வாங்கித் தருவதாக அந்த தம்பதியினர் கூறியுள்ளனர். இதனை நம்பிய பிரபாகரன், தமது ஊரைச் சேர்ந்த பிரேம்குமார், முருகன், ரகுபதி, சண்முகசுந்தரம், கவிமணி, கதிரவன் மற் றும் இருகையூரைச் சேர்ந்த குருதேவன் ஆகியோரை பிரகாஷிடம் அறிமுகம் செய்து வைத்தார்.

இவர்களிடம் சிமென்ட் நிறுவனம், சேலம் ஆவின் நிறுவனம், ஆட்சியர் அலு வலகம் மற்றும் அஞ்சல் துறை போன்ற இடங்க ளில் வேலை வாங்கி தருவ தாக கூறி ரூ.27,10,000} யை பெற்றுக் கொண்டார். இதையடுத்து பிரகாஷ், பிரபாகரனுக்கும், கவிம ணிக்கும் அஞ்சல் துறை யில் பணி நியமன ஆணையை வழங்கியுள் ளார்.

இதனை பெற்றுக் கொண்ட அவர்கள் அஞ் சல் துறையில் விசாரித்த போது, பணி நியமன ஆணை போலியானது என தெரியவந்தது. இது தொடர்பாக பிரபாகரன், பிரகாஷிடம் கேட்ட போது இது பற்றி வெளி யில் ஏதாவது புகார் கொடுத்தால் உங்களை வெட்டி கொலை செய்து விடுவதாக என்று மிரட்டியுள்ளார்.

இதையடுத்து பிரபாகரன் கடந்த 29.9.2022 அன்று அரிய லூர் மாவட்ட காவல் கண் காணிப்பாளரிடம் அளித்த புகாரின் பேரில், மாவட்ட குற்றப்பிரிவு காவல்துறை யினர் வழக்குப் பதிந்து, பிரகாஷ் மற்றும் அவரது மனைவி மதியழகி ஆகி யோரை தேடி வந்தனர்.

இந்நிலையில் காவல்து றையினருக்கு கிடைத்த தகவலின்படி, அரியலூர் மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் குண மதி, உதவி ஆய்வாளர்கள் ரவி, முருகன் உள்ளிட்ட காவல் துறையினர், ஜெயங்கொண்டம் அண் ணாசிலை அருகே நின்று கொண்டிருந்த பிரகாஷையும், அரியலூர் ராஜீவ் நகர் பேருந்து நிறுத் தத்தில் நின்று கொண்டி ருந்த பிரகாஷ் மனைவி மதியழகியையும் புதன்கி ழமை இரவு கையும் களவு மாக பிடித்து, விசாரணை மேற்கொண்டு வியாழக்கிழமை கைது செய்தனர்.

மேலும் அவர்களிடமி ருந்து இரண்டு கைப்பேசி கள், 60 கிராம் தங்க நகை கள், ரூ.56,070 ரொக்கம், 3 ஏடிஎம் கார்டுகள் மற்றும் சில போலி நியமனை ஆணை கடிதங்களை பறி முதல் செய்தனர்.

# வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க திருப்பூருக்கு 3 லட்சம் விண்ணப்பங்கள்

திருப்பூர், செப். 16

18வயதுநிரம்பியவர்கள் இந்த வாக்காளர் பட்டிய லில் பெயர் சேர்க்க விண் ணப்பிக்கலாம். வாக்குச் சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் அடுத்த மாதம் முதல் நடைபெற இருக்கிறது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத் தம்2024 பட்டியல் வரு கிற அக்டோபர் மாதம் 17ந் தேதி வெளியிடப்பட உள் ளது. 112024 அன்று 18 வயது நிரம்பியவர்கள் இந்த வாக்காளர் பட்டிய லில் பெயர் சேர்க்க விண் ணப்பிக்கலாம் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

சிறப்பு சுருக்க முறை திருத்த பட்டியல் வெளி யான பிறகு வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் அடுத்த மாதம் முதல் நடைபெற இருக்கி றது.

இதற்காக திருப்பூர் மாவட்டத்துக்கு உட்பட்ட 8 சட்டமன்ற தொகுதிக ளுக்கான வாக்காளர் பெயர் சேர்ப்பு, மாற்றம், திருத்தப்பணிகளை மேற்கொள்ளும் படிவங் கள் திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் உள்ள தேர்தல் பிரிவுக்கு வந்துள் ளது. பெயர் சேர்த்தலுக் கான படிவம்6 விண்ணப் பங்கள் 1 லட்சம் வரவழைக்கப்பட் டுள்ளது.

இதுதவிர பெயர் நீக்கத்துக்கான படிவம்7, முகவரி மாற்றம், சட்ட மன்ற தொகுதி மாற்றம், திருத்தப்பணிகளுக்கான படிவம்8 என மொத்தம் 3 லட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இந்த விண்ண ப்பங்கள் அனைத்தையும் அந்தந்த சட்டமன்ற தொகுதி வாரியாக உதவி தேர்தல் நடத்தும் அலுவல கத்துக்குதிருப்பூர்மாவட்ட தேர்தல் பிரிவு அலுவ லகத்தில் இருந்து பிரித்து அனுப்பும் பணி நடை பெற்றது.

# இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மையம் தொழில் நுட்பத்தில் 4 இடங்களில் நீர் சுத்திகரிப்பு நிலையம்




மாமல்லபுரம், செப். 16

நீர் சுத்திகரிப்பு நிலை யம், அணுசக்தி துறையின் தொழில் நுட்பத்தில் நிறு வப்பட்டது. திருக்கழுக்குன்றம் பி.ஜே. பி பிரமுகர் தனசேகர் உள் ளிட்டோர் விழாவில் பங் கேற்றனர்.

கல்பாக்கம் இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம் சார்பில், மத்திய அரசின் "தூய்மை இந் தியா" திட்டத்தின் கீழ், 15லட்சம் ரூபாய் செல வில், சதுரங்கபட்டினம் மீனவர் குடியிருப்பு, காவாக்கரை, கல்பாக்கம் கே.வி2 ஸ்கூல், திருக்கழுக்குன்றம் அரசு மருத்துவமனை ஆகிய நான்கு இடங்களில் மக் கள் பயன்படுத்த சுத்த மான குடிநீர் வசதிக்காக தலா 500லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட நீர் சுத்திக ரிப்பு நிலையம், அணு சக்தி துறையின் தொழில் நுட்பத்தில் நிறுவப்பட்டது. அவை களை மக்களின் பயன் பாட்டிற்கு இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மையத் தின் இயக்குனர் வெங்கட் ராமன் திறந்து வைத்தார். சதுரங்கபட்டினம் ஊராட்சி தலைவர் ரேவதி சாமிநாதன், திருக்கழுக்குன்றம் பி.ஜே. பி பிரமுகர் தனசேகர் உள் ளிட்டோர் விழாவில் பங் கேற்றனர்.

# நெல் விதைகளை உரிமம் பெற்ற கடைகளில் மட்டுமே வாங்க வேண்டும்

காங்கயம், செப். 16

உரிமம் பெறாத விதை விற்பனையாளர்களிடம் இருந்து விதைகளை வாங் கக்கூடாது. தகவல் பலகை யில் விவசாயிகளுக்கு தெரியும்படி விதை இருப்பு விலை விவரங் களை எழுதி வைக்க வேண்டும்.


நெல் விதைகளை உரி மம் பெற்ற கடைகளில் மட்டுமே வாங்க வேண் டும் என விதை ஆய்வு துணை இயக்குநர் அறிவு றுத்தியுள்ளார்.

இது குறித்து, ஈரோடு மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குநர் பி.சுமதி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது: கீழ்ப வானி வாய்க்கால் பாசனம் பெறும் காங்கயம் தாலுகா பகுதிக்கு உட்பட்ட நத்தக் காடையூ ர், முத்தூர் பகுதி களில் தற்போது சம்பா பரு வத்தில் நெல் பயிரிட ஏற்ற சூழ்நிலை உள்ளது. எனவே சான்று பெற்ற நெல் விதைகளை லேபிளு டன் கூடிய பேக்குகளில் வாங்க வேண்டும். விதை களை உரிமம் பெற்ற அரசு மற்றும் தனியார் விதை விற்பனையாளரிடம் இருந்து மட்டுமே வாங்க வேண்டும். அத்துடன் வாங்கும் தேதி, காலாவதி தேதி ஆகியன குறிப்பிட்டு இருக்கிறதா என்பதை கவ னித்து வாங்க வேண்டும். விதைக்கான ரசீதில் விற்ப னையாளர், வாங்குவோர் கையொப்பமிட்டு ரசீது பெற வேண்டும். உரிமம் பெறாத விதை விற்பனை யாளர்களிடம் இருந்து விதைகளை வாங்கக்கூ டாது.

அத்துடன் விதை விற்ப னையா ளர்கள் இருப்பில் உள்ள விதைகளுக்கான இருப்பு பதிவேடு, கொள் முதல் பட்டியல், விற் பனை பட்டியல், முளைப் புத்திறன் அறிக்கை பதிவு சான்றிதழ் போன்ற ஆவ ணங்கள் அனைத்தும் முறையாக பராமரிக்கப் பட வேண்டும்.

தகவல் பலகையில் விவ சாயிகளுக்கு தெரியும்படி விதை இருப்பு விலை விவ ரங்களை தெளிவாக எழுதி வைக்க வேண்டும். தவறும் பட்சத்தில் விதை விற்பனை நிலையங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# கோவைப்புதூர் பத்திரகாளியம்மன் கோவிலில் அமாவாசை சிறப்பு பூஜை



குனியமுத்தூர், செப். 16

கோவையை அடுத்த கோவைப்புதூரில் பத்திர காளி அம்மன், கருப்பரா யர், குரு சக்தி நாதர் ஆல யம் அமைந்துள்ளது. இங்கு ஒவ்வொரு மாத மும் அமாவாசை தினத் தன்று இரவு பத்திரகாளி அம்மனுக்கு சிறப்பு பூஜை நடைபெறுவது வழக்கம். அத்தகைய நாளில் கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் இருந்து பக்தர்கள் இங்கு வந்து அம்மனை தரிசனம் செய்துவிட்டு செல்வது வழக்கம். அதே போன்று இந்த மாதமும் அமா வாசை நாளாகிய நேற்று இரவு ஸ்ரீ பத்ரகாளி அம்ம னுக்கு சிறப்பு பூஜை நடை பெற்றது.

ஸ்ரீ சித்தர் சக்தி நகர் அறக் கட்டளையின் நிறுவனர் ஸ்ரீ சிவஜோதி சித்தரையா தலைமையில் நடை பெற்ற இந்த அமாவாசை பூஜையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர். அக் னியில் அம்மன் உருவம் தெரிந்த காரணத்தால் பக் தர்கள் உடனே பரவசம் அடைந்தனர். பக்தர்க ளுக்கு பிரசாதம் வழங்கப் பட்டது.

# மடத்துக்குளம் வேளாண்மை அலுவலகத்தில் தென்னங்கன்றுகள் விற்பனை

மடத்துக்குளம், செப். 16

கூலி ஆட்களுக்கு பற் றாக்குறை நிலவி வரும் நிலையில் பல விவசாயி கள் தென்னை சாகுபடி யில் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர். இந்த நிலையில் விவசாயிக ளு க்கு தரமான தென்னங்கன் றுகள் சரியான விலையில் கிடைக்கும் வகையில் மடத்துக்குளம் வேளாண் மைத்துறை அலுவலகத் தில் தென்னங்கன்றுகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதிகாரிகள் கூறியதாவது: ஆழியார் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள பண் ணையில் தரமான தென் னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு உற்பத்தி செய் யப்படும் தென்னங்கன்று களை விவசாயி களு க்கு வினியோகிக்கும் வகையில் வேளாண்மைத் துறை அலுவலகத்துக்கு வரவழைக்கப்பட்டுள் ளது. தற்போது முதல் கட் டமாக நெட்டைகுட்டை ரக தென்னங்கன்றுகள் 700 வந்துள்ளது. இந்த ரகத்தை இளநீர் மற்றும் தேங்காய் உற்பத்திக்கு பயன்படுத்த லாம். அதனை ஒரு கன்று ரூ. 125 என்ற விலையில் விவசாயிகளுக்கு வழங்கி வருகிறோம். தேவைப்ப டும் விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலரையோ அல்லது வட்டார வேளாண்மை விரிவாக்கமையத்தையோ அணுகலாம். புதிதாக நடவு செய்யும் வகையில் அதிக எண்ணிக்கையில் கன்றுகள் தேவைப்படும் விவசாயிகள் முன்பதிவு செய்து பெற்றுக்கொள்ள லாம். மடத்துக்குளம் வட் டாரத்துக்கு நடப்பு ஆண் டில் 2500 தென்னங்கன்று கள் ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. இவ்வாறு அதிகா ரிகள் கூறினர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# கடலூர் மாநகராட்சியில் வடிகால் வாய்க்கால் தூர்வாரும் பணி: அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்



கடலூர், செப். 16

கடலூர் மாநகராட்சிக் குட் பட்ட முதுநகர் பகுதி யில் வடிகால் வாய்க்கால் தூர்வாரும் பணியை தொடங்கி வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமை தாங்கி, தூர்வா ரும் பணியை தொடங்கி வைத்தார். கலெக்டர் அருண்தம்பு ராஜ், மாநக ராட்சி மேயர் சுந்தரி, மாந கராட்சி ஆணையாளர் காந் திராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் தி.மு.க. மாநகர செயலாளர் ராஜா, தெற்கு ஒன்றிய செயலாளர் விஜய சுந்தரம், மாணவரணி துணை அமைப்பாளர் பாலாஜி, தகவல் தொழில் நுட்ப அணி கார்த்திக், மண்டல குழு தலைவர் கள் பிரசன்னா, இளைய ராஜா, மாநகராட்சி கவுன் சிலர்கள் விஜய லட்சுமி செந்தில், பால சுந்தர், மாவட்ட பிரதிநிதி கள் துர்கா செந்தில், மஸ்கட் புகழேந்தி, பகுதி துணை செயலாளர்கள் வக்கீல் பாபு, லெனின், இளைஞ ரணி கோபி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# சூளகிரி பகுதிகளில் மத்திய ஜல்சக்தி மிஷன் குழுவினர் ஆய்வு



கிருஷ்ணகிரி, செப். 16

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி தாலுகா, சூளகிரி ஊராட்சி ஒன்றியத்தில் 42 ஊராட்சிகள் அமைந்துள்ளது. இதில் 8 கிராம ஊராட்சிகளான ஆலூர், காமன்தொட்டி, பிர்ஜேபள்ளி, அத்திமுகம், பங்கனஅள்ளி, சென்னப்பள்ளி, ஓசால்லி, மாரண்டபள்ளி ஆகிய 8 கிராம ஊராட்சிகளில் மத்திய அரசு மற்றும் மாநில அரசு வாயிலாக தனிநபர் குடியிருப்பு இணைப்புகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்ட செயலாக்ககத்தினை ஆய்வு செய்யும் பொருட்டு மத்திய ஜல் சக்தி மிஷன் அமைச்சரகத்தில் இருந்து சிசியா பால் சேட்டி மற்றும் கன்சான் பாக் அகமத் ஆகியோர் நேரில் வந்து ஆய்வு செய்தனர். 8 கிராம ஊராட்சிகளில் குடிநீர் தரம், குளோரிநேசன், பாதுகாப்பான குடிநீர், தங்க தடை இன்றி குடிநீர் வழங்குதல், மற்றும் மத்திய மாநில அரசின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகளையும் ஆய்வு மேற்கொண்டார்கள்.

மேலும், குடிநீர்தரம் பரிசோதனை சுய உதவி குழு உறுப்பினர்கள் மேற்கொள்ளப்பட்டதை கண்காணித்தனர். இந்த நிகழ்வில் உதவி திட்ட அலுவலர்கள் அருள்மொழி, தேவ ராஜ், உதவி செயற்பொறியாளர், மாது, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாப்பிரான்சி, விமல் ரவிக்குமார், உதவி பொறியாளர்கள், பணி மேற்பார்வையாளர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், சுய உதவி குழு மேலாளர்கள், உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற செயலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டார்கள்.

# தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்




மேலூர், செப். 16

மேலூரில் தி.மு.க. வடக்கு மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் அமைச்சர் மூர்த்தி தலைமையில் நடந்தது. கூட்டத்தில் அமைச்சர் பேசுகையில், உட்கட்சி வேற்றுமையை மறந்து வரும் தேர்தலில் அனைவரும் பொறுப்பாளராக செயல்பட வேண்டும். மதுரை வடக்கு மாவட்டம் சார்பில் நடைபெற உள்ள நிகழ்ச்சிகளில் நிர்வாகிகள் தங்களுக்குரிய பணிகளை சிறப்பாக செய்ய வேண்டும். செயல்படாத நிர்வாகிகள் கண்காணித்து அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். நகராட்சி தலைவர் முகமது யாசின், வல்லாளபட்டி சேர்மன் குமரன், பொதுக்குழு உறுப்பினர்கள் செல்வராஜ் சுபைதா அப்பாஸ், தொண்டரணி அமைப்பாளர் வேலாயுதம்,

இளைஞர்அணிஅமைப்பாளர் அழகுபாண்டி, வேலூர் யூனியன் துணை சேர்மன் பாலகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர் ராஜராஜன், கிருஷ்ணமூர்த்தி, பிரபு, பழனி வல்லாளப்பட்டி கார்த்திகேயன், முன்னாள் ஒன்றிய செயலாளர் துரைபுகழேந்தி, முருகானந்தம், நகராட்சி கவுன்சிலர் அலாவுதீன் உட்பட ஏராளமான கலந்து கொண்டனர்.

# நீலகிரியில் பலாப்பழங்களை ருசிக்க வரும் யானைகள் ஊருக்குள் புகுந்து அட்டகாசம்



அரவேணு, செப். 16

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி மற்றும் குஞ்சப்பனை, கருக்கியூர், கிலிப்பி, செம்னாரை ஆகிய சுற்றுவட்டார பகுதிகளில் தற்போது பலாப்பழ சீசன் நிலவுகிறது. இதனால் அங்கு உள்ள மரங்களில் பலாப்பழங்கள் பழுத்து தொங்கு கின்றன. எனவே சமவெளி பகுதிகளில் உள்ள காட்டு யானைகள் பலாப்பழங்களை பிடுங்கி தின்பதற்காக ஊருக்குள் படையெடுத்து வருகின்றன. இவை அந்த பகுதியில் தற்போது நிரந்தரமாக முகாமிட்டு உள்ளன. அப்போது ஒருசில நேரங்களில் காட்டு யானைகள் அருகில் உள்ள கிராம பகுதிகளிலும் புகுந்து அட்டகாசம் செய்து வருகின்றன. கோத்தகிரி அருகே உள்ள கொணவக்கரை, முல்லை நகர் பகுதியில் விவசாயி பிரவீன் என்பவர் சுமார் ஒரு ஏக்கர் பரப்பில் மேரக்காய் பயிரிட்டு உள்ளார். மேலும் தோட் டத்தை ஒட்டி 50க்கும் மேற்பட்ட வாழை மரங்களையும் சாகுபடி செய்து இருந்தார்.

இந்த நிலையில் அங்கு நேற்று முன்தினம் நள்ளிரவில் காட்டுயானைகள் வந்தன. அப்போது அவை வாழை மரங்களை தின்றும், சேதப்படுத்தியும் அட்டகாசம் செய்தன. ஆனால் மேரக்காய் தோட்டத்திற்குள் நுழையவில்லை. இதனால் அங்கு விளைந்து இருந்த மேரக்காய்கள் தப்பின.

இதுகுறித்து விவசாயி பிரவீன் கூறுகையில், மேரக்காய் தோட்டத்திற்குள் காட்டுயானைகள் புகுந்து இருந்தால் அறுவடைக்கு தயாரான மேரக்காய்கள் வீணாகி, சுமார் ரூ.8 லட்சம் வரை நஷ்டம் ஏற்பட்டு இருக்கும். காட்டுயானைகள் மீண்டும் வராமல் தடுக்க, மீதமுள்ள வாழை மரங் களை வெட்டி சற்று தொலைவில் உள்ள சாலையில் போட்டு உள்ளோம். ஊருக்குள் புகுந்து அட்டூழியம் செய்யும் காட்டு யானைகளை தடுக்க வனத்துறையினர் உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து உள்ளனர்.

# வேளாண்மை கல்லூரியில் மாணவர்கள் வரவேற்பு விழா

பெரம்பலூர், செப். 16

பெரம்பலூர் அருகே திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் வல்லபுரம் பிரிவு அருகே உள்ள தந்தை ரோவர் வேளாண்மை கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான 16வது ஆண்டு வகுப்புகள் தொடக்க விழாவும் புதிய மாணவர்கள் வரவேற்பு விழாவும் நடைபெற்றது

விழாவிற்கு தந்தை ரோவர் கல்வி மற்றும் சமூக மேம்பாட்டு நிறுவனங்களின் மேலாண் தலைவர் வரதராஜன் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் ஜான் அசோக் வரதராஜன் முன்னிலை வகித்தார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிறுவன பயிரில் துறை தலைவர் சோமசுந்தரம் கலந்து கொண்டு பேசினார் கல்லூரி முதல்வர் வஹாப் கல்லூரியின் ஒருங்கிணைப்பாளர் சக்திஸ்வரன் ஆகியோர் பேசினார்கள். விழாவிற்கான ஏற்பாடுகளை கல்லூரியின் நிர்வாக அலுவலர் ஜெயசீலன் அலுவலக மேலாளர் திருநாவுக்கரசு ஆகியோர் செய்திருந்தனர். முன்னதாக ஆசிரியர் அப்துல் ரகுமான் வரவேற்றார் முடிவில் முதலாம் ஆண்டு வகுப்பு ஒருங்கிணைப்பாளர் பரமேஸ்வரி நன்றி கூறினார்.

# அரசு பள்ளியில் சர்வதேச கலாச்சார ஒற்றுமை தினம் கொண்டாட்டம்

வேதாரண்யம், செப். 16

வேதாரண்யம் அடுத்த அண்டர்காடு சுந்தரேசவிலாஸ் அரசு தொடக்கப்பள்ளியில் சர்வதேச கலாச்சார ஒற்றுமை தினம் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிக்கு பள்ளி ஆசிரியர் வசந்தா தலைமை தாங்கினார். பள்ளியின் பொறுப்பு தலைமையாசிரியர் ரவீந்திரன், ஆசிரியர்கள் சந்திரசேகரன், சரண்யா, இலக்கியா, விஜயலக்ஷ்மி, ஆனந்தன், பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர், பள்ளி மேலாண்மை குழுவினர், உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து, மாணவ மாணவிகளுக்கு சர்வதேச கலாச்சார ஒற்றுமை குறித்து எடுத்து கூறப்பட்டது. இவைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வண்ணம் மாணவர்கள் சிறப்பு ஓவியத்திற்கு வண்ணம் தீட்டினர். மாணவர்களின் சிறந்த படைப்புகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

# விவசாயி கொலை வழக்கில் மாற்றுத்திறனாளிக்கு ஒரு ஆண்டு ஜெயில்

திருப்பத்தூர், செப். 16

திருவண்ணாமலை மாவட்டம், ஜமுனாமரத்தூர் அருகே உள்ள பட்டன் கோவிலூர் கிராமத்தை சேர்ந்தவர் சின்னதுரை (வயது 37), விவசாயி. கொலை இவருக்கும், இவரது உறவினரான அதே பகுதியை சேர்ந்த மாற்றுத்திறனாளியான துரை என்பவருக்கும் நிலம் தொடர்பாக தகராறு இருந்து வந்தது. கடந்த 2012ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8ந் தேதி துரைக்கு சொந்தமான நிலத்தில் சின்னதுரை மாடுகளை மேய்த்துள்ளார். இதனை துரை தட்டிக்கேட்டார். இதில் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது.

ஆத்திரமடைந்த துரை மற்றும் அவருடைய ஆதரவாளர்களான வெள்ளையன், இந்திராணி, ஜானகி ஆகிய 4 பேரும் சேர்ந்து சின்னதுரையை சரமாரியாக தாக்கினர். அப்போது துரை உருட்டு கட்டையால் சின்னதுரையின் தலையில் தாக்கினார். இதில் படுகாயம் அடைந்த சின்னதுரை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்தார்.

இது குறித்து ஜமுனாமரத்தூர் போலீசார் வழக்குப் பதிவு செய்து துரை, வெள்ளையன், இந்திராணி, ஜானகி ஆகிய 4 பேரை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை திருப்பத்தூர் மாவட்ட கூடுதல் அமர்வு கோர்ட்டில் நடந்தது. விசாரணை முடிந்து நேற்று தீர்ப்பு கூறப்பட்டது. இந்த வழக்கில் அரசு தரப்பில் வக்கீல் பி.டி.சரவணன் ஆஜரானார். அதில் துரைக்கு ஒரு ஆண்டு சிறை தண்டனையும், ரூ.5 ஆயிரம் அபராதமும் விதித்து நீதிபதி மீனாகுமாரி தீர்ப்பு வழங்கினார். வெள்ளையன், இந்திராணி, ஜானகி ஆகிய 3 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

# வியாபாரிக்கு சரமாரி அரிவாள் வெட்டு

ராஜபாளையம், செப். 16

ராஜபாளையம் அருகே உள்ள அயன்கொல்லம்கொண்டான் பகுதியை சேர்ந்தவர் மாரியப்பன். இவர் பலகாரம் தயாரித்து மோட்டார் சைக்கிளில் ஊர் ஊராக சென்று விற்பனை செய்து வந்தார். சம்பவத்தன்றும் அவர் வியாபாரத்திற்கு புறப்பட்டார். அப்போது அவரை வழிமறித்த அதே பகுதியை சேர்ந்த மணிகண்ட ஜோதி(18) என்பவர் மாரியப்பனை மிரட்டி பணம் கேட்டுள்ளார். ஆனால் அவர் தர மறுத்து விட்டார். இதனால் அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. இதில் ஆத்திரமடைந்த மணிகண்ட ஜோதி தான் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து மாரியப்பனை சரமாரியாக வெட்டினார். இதில் தலை மற்றும் கைகளில் வெட்டு விழுந்தது. கை விரல்கள் துண்டாகின. வலியால் துடித்த மாரியப்பனை அக்கம் பக்கத்தினர் மீட்டு பாளையங்கோட்டை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர் சிகிச்சை பெற்று வருகிறார். இந்த சம்பவம் தொடர் பாக சேத்தூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து மணிகண்ட ஜோதியை கைது செய்தனர். விசாரணையில், இவருக்கு சிறு வயதில் இருந்தே போதை பழக்கம் இருந்தது. இதனால் குற்ற செயல்களில் ஈடுபட்டு வந்ததும் தெரியவந்தது.

# தருமபுரி வரத்து அதிகரிப்பால் கத்திரிக்காய், வெண்டைக்காய் விலை தொடர்ந்து வீழ்ச்சி



தருமபுரி, செப். 16

தருமபுரி மார்க்கெட்டில் கடந்த சில மாதங்களாக, தக்காளி, சிறிய வெங்காயம், கேரட், பீன்ஸ், கத்தரிக்காய், எலுமிச்சை, பச்சை மிளகாய், குடை மிளகாய், இஞ்சி, பாகற்காய் உள்ளிட்ட பலவகை காய்கறிகளின் வரத்து குறைந்தது. அதனால், அவற்றின் விலை கிடுகிடுவென உயர்ந்தது. தக்காளி, சிறிய வெங்காயம், இஞ்சி ஆகியவை, கிலோ 200 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யப்பட்டன. மற்ற காய்கறிகள், கிலோ 60க்கு மேல் விற்பனை செய்யப்பட்டன. இதனால், பொது மக்கள் கடும் அதிர்ச்சி அடைந்தனர். தற்போது தருமபுரி மாவட்டத்தில் நல்ல மழை பெய்து உள்ளதால் விவசாயிகள் கத்திரி, வெண்டை, பாகற்காய், முள்ளங்கி, சுரைக்காய் ,உள்ளிட்ட அனைத்து வகை காய்கறிகளும் பயிரிட்டு வருகின்றனர். காய்கறிகளின் வரத்து அதிகரிப்பால் விலை குறைய தொடங்கியுள்ளது மேலும் கத்திரிக்காய் விலை அதிக வரத்தால் வீழ்ச்சி அடைந்துள்ளது. தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் கத்தரிக்காய் சாகுபடி செய்யப்படுகிறது. எனினும் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அதிகமாகக் கத்தரிக்காய் பயிரிடப்படுகிறது. பொதுவாக கத்தரிக்காய் டிசம்பர்ஜனவரி, மேஜூன், அக்டோபர் நவம்பர் என 3 பட்டங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. நட்டு 40 நாள்களில் அறுவடைக்கு வரும். அடுத்து 110 நாள்கள் வரை பலன் கொடுக்கும். தருமபுரி மாவட்டத்தில் கத்திரிக்காய் வெண்டைக்காய் சுமார் ஆயிரம் ஏக்கருக்கு மேல் பயிரிடப்பட்டு உள்ளது. மேலும் இங்கு விளையும் பச்சைக் கத்திரிக்காய் கேரளாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. விவசாயிகள் பெரும்பாலும் நீல நிற கத்திரிக்காய் உடலுக்கு ஆரோக்கியத்தையும் ஊட்டச்சத்து மிகுந்தது என்பதாலும் அனைத்து விசேஷங்களுக்கும் கத்திரிக்காய் பயன்படுத்தப்படுவதால் விவசாயிகள் அதிகமாக சாகுபடி செய்து வருகின்றனர். தற்போது பரவலாக தருமபுரி கிருஷ்ணகிரி மாவட்டங்களில் பல ஆயிரம் ஏக்கரில் கத்திரிக்காய் வெண்டைக்காய் சாகுபடி செய்யப்பட்டு இருப்பதால் வரத்து அதிகரித்துள்ளது இதனால் உழவர் சந்தையில் கிலோ 8 ரூபாய் முதல் பத்து ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது விவசாயிகளிடத்தில் கிலோ 3 ரூபாய் முதல் 5 ரூபாய் வரை வியாபாரிகள் கொள்முதல் செய்து வெளி மார்க்கெட்டில் 8 ரூபாய் முதல் பத்து ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

# செம்பட்டி அருகே நஷ்டஈடு வழங்காததால் உயர்மின் கோபுரம் அமைக்கும் பணிகள் நிறுத்தம்



செம்பட்டி, செப். 16

விவசாயிகளுக்கு சொந்தமான விளை நிலங்களில் உயர் மின் கோபுரம் அமைக்கப்பட்டு வருகிறது. கடந்த 2019ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பணிகள், தற்போது முடிவடையும் நிலையில் உள்ளது. இந்நிலையில், உயர் மின்கோபுரம் அமைக்க இடம் கொடுத்த விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு தொகை வழங்காததால், அமைச்சர் இ.பெரியசாமியிடம் நேரில் சந்தித்து விவசாயிகள் புகார் செய்தனர்.

திண்டுக்கல் மாவட்டம், செம்பட்டி அருகே, தெற்கு மேட்டுப்பட்டி வழியாக, தூத்துக்குடியில் இருந்து கொச்சின் வரை மின்சாரம் உயர் மின் கோபுரம் மூலம் கொண்டு செல்லப்படுகிறது. செம்பட்டி அடுத்த, வீரக்கல் ஊராட்சிக்கு உட்பட்ட, வீ.கூத்தம்பட்டி, தெற்கு மேட்டுப்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதியை சேர்ந்த 200க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு சொந்தமான விளை நிலங்களில் உயர் மின் கோபுரம் அமைக்கப்பட்டு வருகிறது. கடந்த 2019ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பணிகள், தற்போது முடிவடையும் நிலையில் உள்ளது. இந்நிலையில், உயர் மின்கோபுரம் அமைக்க இடம் கொடுத்த விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு தொகை வழங்காததால், அமைச்சர் இ.பெரியசாமியிடம் நேரில் சந்தித்து விவசாயிகள் புகார் செய்தனர். அதன்பின்னர் அவர், நடவடிக்கை எடுத்ததின் பேரில், விவசாயிகள் சிலருக்கு மட்டும் மின்வாரிய அதிகாரிகள் பணம் வழங்கியுள்ளனர். அதன்பின்னர், மின்வாரிய அதிகாரிகள் அப்பகுதிக்கு செல்லவில்லை. இந்நிலையில் தெற்கு மேட்டுப்பட்டி பகுதிக்கும் சென்ற மின்வாரிய அதிகாரிகளை இடம் கொடுத்த விவசாயிகள் முற்றுகையிட்டு தங்களுக்கு வழங்கவேண்டிய இழப்பீடு தொகையை வழங்கும்படி கூறி கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மேலும் பணிகள் செய்ய விடாமல் அவர்களை திருப்பி அனுப்பி விட்டனர். இந்நிலையில் நேற்று இப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கொழுந்தான் (58), மாரிமுத்து (45), விக்னேஷ் (25), சரவணன் (42) உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட விவசாயிகள் மீண்டும் மின்வாரிய ஊழியர்களை பணி செய்ய விடாமல் அனுப்பிவிட்டனர். இது குறித்து விவசாயிகள் கூறுகையில், விவசாயிகளிடம் இடம் கேட்க வரும்போது அதிகாரிகள் உங்கள் இடத்திற்குரிய இழப்பீடு தொகையை உடனடியாக வழங்குகிறோம் என கூறி 3 ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆனால், இதுநாள் வரை முறையாக உரிய இழப்பீடு தொகையை தரவில்லை. அதனால் இங்கு வந்த மின்சாரத்துறை அதிகாரிகளை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினோம். இதுகுறித்து அமைச்சர் இ.பெரியசாமியிடம் புகார் செய்துள்ளோம் என்றனர். இந்நிலையில் மின்வாரிய உதவி பொறியாளர் லெனின் பணிகள் செய்ய விடாமல் தடுத்ததாக தெற்கு மேட்டுப்பட்டி பகுதியை சேர்ந்த விவசாயிகள் மீது செம்பட்டி போலீசில் புகார் செய்துள்ளார்.

இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பஸ்சில் பயணம் செய்த மூதாட்டியிடம் 3 பவுன் நகை அபேஸ்

ஈரோடு ,செப். 16

பாக்கியலட்சுமி தான் அணிந்திருந்த 3 பவுன் தங்க நகையை காணவில்லை என கூச்சலிட்டார். பஸ்சில் பயணம் செய்த அனைத்து பயணிகளின் உடைமைகளும் சோதனை செய்யப்பட்டது.

கோவைமாவட்டம்மோலப்பாளையம் பகுதியில் வசித்து வருபவர் பாக்கியலட்சுமி (60). இவர் தனது உறவினர்களுடன் கோபிசெட்டி பாளையத்தில் உள்ள கோவிலுக்கு செல்வதற்காக பெருந்துறை பஸ் நிலையம் வந்துள்ளார். அங்கு கோபிசெட்டி பாளையம் செல்வதற்காக தயாராக இருந்த டவுன் பஸ்சில் ஏறியுள்ளனர். பஸ் புறப்பட்ட நிலையில் மூதாட்டி பாக்கியலட்சுமி தான் அணிந்திருந்த 3 பவுன் தங்க நகையை காணவில்லை என கூச்சலிட்டார். இதனையடுத்து பஸ் கண்டக்டர் மற்றும் டிரைவர் பஸ்சில் இருந்த பயணிகளுடன் பெருந்துறை போலீஸ் நிலையத்திற்கு சென்றனர்.

பின்னர் பெருந்துறை போலீஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து பஸ்சில் பயணம் செய்த அனைத்து பயணிகளின் உடைமைகளும் சோதனை செய்யப்பட்டது.

மேலும் போலீசார் பஸ் முழுவதும் தீவிர சோதனையிட்டனர். எனினும் நகையை கண்டு பிடிக்க முடியவில்லை. இது குறித்து பெருந்துறை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பெண்களுக்கு நம்பிக்கை கொடுக்கும் மகளிர் உரிமை தொகை திட்டம்: விஜய் வசந்த் எம்.பி.

கன்னியாகுமரி,

பெண்கள் சொந்த காலில் நிற்க வேண்டும், யாரையும் சார்ந்து வாழ தேவையில்லை என தமிழக பெண்களுக்கு நம்பிக்கை கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது தமிழ்நாடு அரசின் கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம். இந்த திட்டத்தின் பெயரே மிக சிறப்பானது. இது மகளிர் உதவி தொகை அல்ல. இது அவர்களின் உரிமை தொகை. தமிழ்நாடு முழுவதும் உள்ள 1 கோடியே 6 லட்சம் பெண்கள் இதனால் பயனடைய போகிறார்கள் என்பது கணக்கு. 1 கோடி 6 லட்சம் குடும்பங்கள் பயனடைவார்கள் என்பதே உண்மை. பெண்களுக்கு கல்வி, வேலை வாய்ப்பு, சம உரிமை ஆகியவற்றில் தமிழ் நாடு என்றுமே எடுத்து காட்டாக விளங்கி உள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் பெண்களின் உரிமைகளும் வழங்கி உள்ளது. இந்த தொகை மகளிர் கையில் இருந்தால் பெண்கள் தங்கள் தேவைகளுக்கு கணவனையோ பிள்ளைகளையோ நாட தேவையில்லை. தேர்தல் வாக்குறுதியாக இதை அறிவித்து அதை இன்று நிறைவேற்றிய தமிழ் நாடு முதலமைச்சர் மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோருக்கு மக்கள் சார்பாக நன்றி. சட்டமன்ற தேர்தலுடன் நானும் தேர்தலை சந்தித்தேன். ஆதலால் இந்த வாக்குறுதி எனக்கும் பொருந்தும். இந்த உரிமை தொகை வாயிலாக பயன் பெறும் அனைத்து மகளிருக்கும் எனது வாழ்த்துக்கள். உங்கள் வாழ்க்கை மற்றும் குடும்பம் செழிக்க வாழ்த்துவதாக விஜய் வசந்த் எம்.பி. தெரிவித்துள்ளார்.



# பூக்களின் விலை உயர்வு

வேலாயுதம்பாளையம், செப். 16

கரூர் மாவட்டம் நொய்யல், மரவாபாளையம், சேமங்கி, முத்தனூர், கோம்புப்பாளையம், திருக்காடுதுறை, பேச்சிப்பாறை, வேட்டமங்கலம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் குண்டுமல்லி, முல்லைப்பூ, சம்பங்கி, சாமந்திப்பூ, அரளி, ரோஜா, செவ்வந்தி உள்ளிட்ட பல்வேறு வகையான பூக்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு கடந்த சில வாரங்களாக பூக்களின் விலை ஏற்ற இறக்கமாக இருந்து வருகிறது. மேலும் சுப முகூர்த்த நாட்கள், கோவில் மற்றும் திருவிழா விசேஷங்கள் போன்ற காரணங்களால் பூ தேவை அதிகரித்து விலை உயர்ந்துள்ளது. கடந்த வாரம் ஒரு கிலோ குண்டு மல்லி ரூ300க்கு விற்பனையானது நேற்று 700 ரூபாய்க்கும், கடந்த வாரம் 70 ரூபாய்க்கு விற்பனையான சம்பங்கி 180 ரூபாய்க்கும், 70 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட அரளி நேற்று 170 ரூபாய்க்கும் விற்பனை ஆனது.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 16.09.2023




## 'மார்க் ஆண்டனி' சூப்பர்.. டூப்பர்.. ஹேப்பி வெங்கட் பிரபு வாழ்த்து

இயக்குனர் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் விஷால் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'மார்க் ஆண்டனி'. இப்படத்தின் நாயகியாக ரித்து வர்மா நடித்துள்ளார். மேலும் எஸ்.ஜே.சூர்யா மற்றும் செல்வராகவன் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். ஜி.வி பிரகாஷ் இசையமைத்துள்ள இந்த படம் இன்று (செப்டம்பர் 15) திரையரங்குகளில் வெளியானது. மிகுந்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இப்படம்வெளியாகியுள்ளதால்ரசிகர்கள்கொண்டாடி வருகின்றனர். இந்நிலையில், 'மார்க் ஆண்டனி' திரைப்படத்திற்கு வாழ்த்து தெரிவித்து இயக்குனர் வெங்கட் பிரபு சமூக வலைதளத்தில் பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில், "மார்க் ஆண்டனி படம் குறித்து நல்ல செய்திகள் வருகிறது. சகோதரர் விஷால் மற்றும் எஸ்.ஜே.சூர்யா சாரை நினைத்து சூப்பர்.. டூப்பர்.. ஹேப்பியாக இருக்கிறது. படக்குழுவிற்கு வாழ்த்துகள்" என்று பதிவிட்டுள்ளார்.



## 'லியோ' படத்தின் முதல் காட்சி எப்போது தெரியுமா?

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகி வரும் படம் 'லியோ'. இப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டூடியோஸ் சார்பில் லலித் குமார் தயாரிக்கிறார். அர்ஜுன், சஞ்சய் தத், திரிஷா, பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், சாண்டி, மேத்யூ தாமஸ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இங்கிலாந்தில் ஒரே நாளில் 10 ஆயிரத்திற்கும் மேல் 'லியோ' திரைப்படத்தின் டிக்கெட்டுகள் முன்பதிவு செய்யப் பட்டுள்ளன. வெளியீட்டு தேதி நெருங்க.. நெருங்க இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகரித்து கொண்டே வருகிறது. இந்நிலையில், 'லியோ' படத்தின் முதல் நாள் முதல் காட்சி குறித்த தகவல் வெளியாகியுள்ளது. அதாவது, தமிழ்நாட்டில் அதிகாலை காட்சிகள் ரத்து செய்யப்பட்டு காலை 9 மணிக்கு முதல் காட்சிகள் திரையிடப்பட்டு வருகிறது. ஆனால், 'லியோ' படத்தின் முதல் காட்சி காலை 11 மணிக்கு திரையிடப்படவுள்ளதாக கூறப்படுகிறது. இதனால் ரசிகர்கள் அதிர்ச்சியில் உள்ளனர்.

## யூ டியூப் சேனல் மீது மான நஷ்ட வழக்கு இசையமைப்பாளர் விஜய் ஆண்டனி அறிவிப்பு



யூ டியூப் சேனல் மீது மான நஷ்ட வழக்கு தொடர இருப்பதாக இசையமைப்பாளர் விஜய் ஆண்டனி அறிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: என் மீது அன்பு கொண்ட, என் அன்பு மக்களுக்கு வணக்கம். நான் இப்போது சிறு மன வேதனையுடன், இந்த கடிதம் மூலம் சில சர்ச்சைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிறேன். ஒரு சகோதரி, யூ டியூப் சேனல் ஒன்றில் என்னையும் சகோதரர் ஏ.ஆர். ரகுமானையும் தொடர்பு படுத்தி பொய்யான வசந்தி ஒன்றை பரப்பி இருக்கிறார். அது முற்றிலும் பொய்யே! அந்த யூ டியூப் சேனல் மீது நான் மான நஷ்ட வழக்கு தொடர இருக்கிறேன். மான நஷ்ட வழக்கில் வரும் தொகை அனைத்தையும், நலிவடைந்த இசைத்துறை நண்பர்களுக்கு முழுமையாக கொடுக்க முடிவு செய்துள்ளேன். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.



## நீங்கள் குத்தும் முத்திரைகள் ஏற்பதில்லை நான் ட்ரெண்டாகும் ரத்தம் பட பாடல்



இயக்குனர் சி.எஸ்.அமுதன் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் 'ரத்தம்'.இந்த படத்தில் விஜய் ஆண்டனி, மகிமா நம்பியார், ரம்யா நம்பீசன், நந்திதா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

இப்படத்தின் டிரைலர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. இப்படம் வருகிற 28ஆம் தேதி வெளியாகும்எனபடக்குழுஅறிவித்திருந்தநிலையில் ரிலீஸ் தேதி மாற்றப்பட்டு அக்டோபர் 6ஆம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், 'ரத்தம்' படத்தில் இடம்பெற்றுள்ள 'ஒரு நாள்' பாடலின் லிரிக் வீடியோ வெளியாகியுள்ளது. ஏற்றத்தாழ்வு குறித்து உருவாகியுள்ள இந்த பாடலை தெருக்குரல் அறிவு எழுதி, பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அடுத்த அறிவிப்பை வெளியிட்ட இறைவன் படக்குழு




இறைவன், ஜெயம் ரவி, அஹமத், iraivan, jeyam ravi, ahmed'வாமனன், 'என்னென்றும் புன்னகை', 'மனிதன்' உள்ளிட்ட படங்களை இயக்கியவர் அஹமத். இவர் இயக்கத்தில் ஜெயம் ரவி நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'இறைவன்'. இந்த படத்தில் ஜெயம் ரவிக்கு ஜோடியாக நயன்தாரா நடித்துள்ளார். இப்படத்திற்கு யுவன்சங்கர் ராஜா இசையமைத்துள்ளார். இப்படத்தின் டிரைலர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. இந்நிலையில், 'இறைவன்' படத்தின் புதிய அப்டேட்டை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, இப்படத்தின் இரண்டாவது பாடலான 'இது போல' பாடலின் லிரிக் வீடியோ நாளை (செப்டம்பர் 16)மாலை5.05மணிக்குவெளியாகும் என படக்குழு வீடியோ ஒன்றை பகிர்ந்துஅறிவித்துள்ளது.'இறைவன்' திரைப்படம் வருகிற 28ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சொன்னதை செய்த விஜய் தேவரகொண்டா.. வாழ்த்தும் 100 குடும்பங்கள்



இயக்குனர்ஷிவாநிர்வாணா இயக்கத்தில் விஜய் தேவரகொண்டா சமந்தா நடிப்பில் செப்டம்பர் 1ஆம் தேதி திரையரங்குகளில் வெளியான திரைப்படம் 'குஷி'. இப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று ரூ. 70 கோடிக்கு மேல் வசூலை குவித்தது. இதையடுத்து இப்படத்தின் வெற்றி விழாவில் நடிகர் விஜய் தேவரகொண்டா, எனது சம்பாத்தியத்தில் இருந்து ஒரு கோடி ரூபாயை தலா ஒரு லட்சம் வீதம் 100 குடும்பங்களுக்கு கொடுப்பேன் என்றும் இந்த தொகை ஹைதராபாத்தில் நடைபெறும் குஷி நிகழ்ச்சிக்கு முன்னதாக கொடுக்கப்படும் என்றும் கூறியிருந்தார். இந்நிலையில், நடிகர் விஜய் தேவரகொண்டா தான் சொன்னது போன்று 100 குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் வீதம் ஒரு கோடி ரூபாயை வழங்கியுள்ளார். இது தொடர்பான புகைப்படம் சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.

## சுப்மன் கில் சதம் வீணானது: இந்தியாவை வீழ்த்தி ஆறுதல் வெற்றி பெற்றது வங்காளதேசம்



ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரின் சூப்பர்4 சுற்றில் இன்று நடக்கும் கடைசி லீக் போட்டியில் இந்தியா, வங்காளதேச அணிகள் மோதுகின்றன. டாஸ் வென்ற இந்திய அணி பந்துவீச முடிவு செய்தது. அதன்படி முதலில் ஆடிய வங்காளதேசம் 50 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 265 ரன்களை எடுத்துள்ளது. கேப்டன் ஷகிப் அல் ஹசன் 80 ரன்னும், தௌஹித் ரிடோய் 54 ரன்னும், நசும் அகமது 44 ரன்னும் எடுத்தனர். இந்தியா சார்பில் ஷர்துல் தாக்கூர் 3 விக்கெட்டும், முகமது ஷமி 2 விக்கெட்டும் வீழ்த்தினர். இதையடுத்து, 266 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது. ரோகித் சர்மா டக் அவுட்டானார். திலக் வர்மா 5 ரன்னிலும், இஷான் கிஷன் 5 ரன்னிலும், கே.எல்.ராகுல் 19 ரன்னிலும் அவுட்டாகினர். சூர்யகுமார் யாதவ் 26 ரன்னும், ஜடேஜா 7 ரன்னிலும் வெளியேறினர். தொடக்க ஆட்டக்காரர் சுப்மன் கில் பொறுப்புடன் ஆடி சதமடித்து அசத்தினார்.அவர் 121 ரன்னில் ஆட்டமிழந்தார். இதில் 5 சிக்சர், 8 பவுண்டரிகள் அடங்கும். கடைசி கட்டத்தில் அதிரடியாக ஆடிய அக்சர் படேல் 42 ரன்கள் சேர்த்து அவுட்டானார். இறுதியில், இந்திய அணி 259 ரன்களை மட்டுமே எடுத்தது. இதன்மூலம் 6 ரன்கள் வித்தியாசத்தில் வங்காளதேசம் ஆறுதல் வெற்றி பெற்றது. வங்காளதேசம் சார்பில் முஸ்தபிர் ரகுமான் 3 விக்கெட்டும், மெஹதி ஹசன், தன்சிம் ஹசன் சாகிப் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.



## ஆசிய கோப்பை: சுப்மன் கில் சதமடித்து அசத்தல்

ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரின் சூப்பர்4 சுற்றில் இன்று நடக்கும் கடைசி லீக் போட்டியில் இந்தியா, வங்காளதேச அணிகள் மோதுகின்றன. டாஸ் வென்ற இந்திய அணி பந்துவீச முடிவு செய்தது. அதன்படி முதலில் ஆடிய வங்காளதேசம் 50 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 265 ரன்களை எடுத்துள்ளது. கேப்டன் ஷகிப் அல் ஹசன் 80 ரன்னும், தௌஹித் ரிடோய் 54 ரன்னும், நசும் அகமது 44 ரன்னும் எடுத்தனர். இந்தியா சார்பில் ஷர்துல் தாக்கூர் 3 விக்கெட்டும், முகமது ஷமி 2 விக்கெட்டும் வீழ்த்தினர். இதையடுத்து, 266 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் சுப்மன் கில் பொறுப்புடன் ஆடினார். முன்னணி வீரர்கள் விரைவில் அவுட்டாகினர். சுப்மன் கில் நிதானமாக ஆடி சதமடித்தார்.இதில் 4 சிக்சர், 6 பவுண்டரிகள் அடங்கும்.

## 10 ஓவர்களில் 113 ரன்கள்.. அதிக ரன்கள் விட்டு கொடுத்த பவுலர் ஆனார் ஆடம் சாம்பா



தென் ஆப்பிரிக்கா சென்றுள்ள ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்று விளையாடி வருகிறது. முதல் இரு போட்டிகளில் ஆஸ்திரேலிய அணியும், மூன்றாவது ஒருநாள் போட்டியில் தென் ஆப்பிரிக்கா அணியும் வெற்றி பெற்றிருந்தது. இந்த நிலையில், இன்று இரு அணிகள் இடையேயான நான்காவது ஒருநாள் போட்டி நடைபெற்றது. இந்த போட்டியில் டாஸ் வென்ற ஆஸ்திரேலியா அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது. உலகின் தலைசிறந்த பந்துவீச்சாளர்களில் ஒருவரான ஆடம் சாம்பா இன்றைய போட்டியில் சோபிக்கவில்லை. மாறாக ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் மோசமான சாதனையை படைத்திருக்கிறார். பத்து ஓவர்கள் பந்து வீசிய ஆடம் சாம்பா 113 ரன்களை வாரி வழங்கினார். ஆடம் சாம்பா பந்துவீச்சில் மட்டும் 8 பவுண்டரிகள், 9 சிக்சர்கள் அடிக்கப்பட்டன. இதன் மூலம் ஒரே ஒருநாள் போட்டியில் அதிக ரன்களை விட்டுக்கொடுத்த வீரர் என்ற மோசமான சாதனையை ஆடம் சாம்பா படைத்து இருக்கிறார். 50 ஓவர் கிரிக்கெட் தொடர்களில் இத்தகைய மோசமான சாதனையை இதுவரை யாரும் படைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய போட்டியில் முதலில் பேட்டிங் ஆடிய தென் ஆப்பிரிக்கா அணிக்கு குயிண்டன் டி காக் மற்றும் ரீசா ஹெண்ட்ரிக்ஸ் ஜோடி நல்ல துவக்கம் கொடுத்தது. இருவரும் முறையே 45 மற்றும் 28 ரன்களை குவித்து ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த ரசி வேன்டெர்டுசென் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி 62 ரன்களைகுவித்து அசத்தினார். இவரைத் தொடர்ந்து களமிறங்கிய மார்க்ரம் எட்டு ரன்களில் பெவிலியன் திரும்பினார். அடுத்து வந்த ஹென்ரிச் கிளாசென் 83 பந்துகளில் 174 ரன்களை குவித்து அசத்தினார். இதில் 13 பவுண்டரிகளும், 13 சிக்சர்களும் அடங்கும். இவருடன் ஆடிய டேவிட் மில்லர் 45 பந்துகளில் 82 ரன்களை குவித்தார். இதன் மூலம் தென் ஆப்பிரிக்கா அணி 50 ஓவர்கள் முடிவில் ஐந்து விக்கெட்கள் இழப்பிற்கு 416 ரன்களை குவித்து உள்ளது.



## ஆட்டத்தில் இல்லாமலும் ஸ்கோர் செய்த விராட் கோலி: வைரலாகும் வீடியோ

கிரிக்கெட் களத்தில் ஆடும் லெவனில் இருந்தாலும், இல்லை என்றாலும் விராட் கோலி ரசிகர்களை மகிழ்விக்காமல் இருந்ததே இல்லை என்லாம். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தனக்குள் இருக்கும் காமெடியை வெளிப்படுத்த விராட் கோலி தவறியதே இல்லை. அந்த வகையில்,

இந்தியா மற்றும் வங்காளதேசம் அணிகள் இடையே நடைபெற்ற ஆசிய கோப்பை தொடரின் கடைசி லீக் போட்டியில் விராட் கோலி ஆடும் லெவனில் சேர்க்கப்பட வில்லை. இந்திய அணி ஆசிய கோப்பை 2023 தொடரின் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுவிட்டதால், இன்றைய போட்டியில் விராட் கோலிக்கு ஓய்வு அளிக்கப்பட்டு இருக்கிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.